இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 15-08-2025

# 79 ஆவது ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி!

இந்திய நாடு தனது 79 ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகிறது. இது சாதாரணமாகக் கிடைத்த சுதந்திரம் அல்ல. போராடிப் பெற்ற சுதந்திரம் ஆகும். ஓராண்டு, ஈராண்டுப் போராட்டம் அல்ல. இருநூறு ஆண்டுகள் போராடியதால் கிடைத்த சுதந்திரம் ஆகும். அனைவரும் போராடியதால் கிடைத்தது இந்த சுதந்திரம். இதனை அனைவருக்குமானதாகப் பயன்படுத்துவதில்தான் சுதந்திரத்தின் பொருளும், இந்திய நாட்டின் எதிர்காலமும் அடங்கி இருக்கிறது.

**“இந்திய மக்களாகிய நாம், ஒரு இறையாண்மை மிக்க, சமதர்மம் சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசு அமைக்கவும் -**

**அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி கிடைக்கவும்-**

**சிந்தனையில், சிந்தனையை வெளிப்படுத்துவதில், நம்பிக்கையில், பற்றுறுதியில், மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும் -**

**தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும் உறுதியாக அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும் -**

**தனி ஒருவரின் மாண்புக்கும், சகோதரத்துவத்தை அனைவரிடத்தில் வளர்க்கவும் -**

**நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் விழுமிய முறைமையுள்ள உறுதி பூண்டு - 1949 நவம்பர் 26 ஆம் நாளாகிய இன்று நம்முடைய அரசமைப்பு நிர்ணய சபையில் ஏற்று சட்டமாகவே இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்” -** என்கிறது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்பு.

இந்த முகப்பை திரும்பத் திரும்ப வாசிக்கும் போது திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது அரசியல் பண்பாடுகளே தவிர வேறல்ல. ஒரு ஆட்சியானது நேர்மையாக, உண்மையாக, நீதியோடு எப்படி நடைபெற வேண்டும் என்பதைத்தான் தனது ஆட்சியியல், அரசியல் இலக்கணமாக இந்திய அரசமைப்புச் சட்டமானது கொண்டுள்ளது.

இந்த முகப்புரையைத்தான் ‘அரசமைப்புச் சட்டத்தின் இதயம்’ என்று சொல்வார்கள். இதற்கு விளக்கம் அளித்த இந்திய நாட்டின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு, ‘மக்கள்தான் அதிகாரத்தின் தோற்றுவாய் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை கூறுகிறது’ என்று சொன்னார். அதாவது, இந்திய நாடு எத்தகைய நோக்கம் கொண்டது, எப்படிச் செயல்பட வேண்டும், எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை விளக்குவதுதான் இந்த முகவுரை.

இதில் இருந்து வழுவும் போதெல்லாம், ‘அது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரைதானே தவிர, சட்டமல்ல’ என்று சிலரால் விளக்கம் அளிக்கப்பட்டது. கேசவானந்த பாரதி- கேரள அரசுக்குமான வழக்கில் (1973) தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், “அரசமைப்பின் முகப்பும், அரசமைப்பின் ஒரு பகுதியே” என்பதை உறுதி செய்தது. அரசமைப்புச் சட்டத்தின் உட்பிரிவுகளில் குழப்பம் ஏற்படும் போது, அதனைத் தெளிவுபடுத்தவும் இந்த முகப்புரை பயன்பட்டு வருகிறது.

இந்திய நாடு, அதன் குடிமக்களுக்கு நீதியை வழங்கும் என்பது தான் இதன் உள்ளடக்கம் ஆகும். சமத்துவம், மதச்சார்பற்ற தன்மை, அனைத்து விதமான சுதந்திரம், சுதந்திரமான நீதித்துறை, பத்திரிக்கைச் சுதந்திரம், சுதந்திரமான தேர்தல்கள் ஆகிய அனைத்தும் இதன் உள்ளடக்கம் ஆகும்.

**இந்திய அரசமைப்பானது பிரிட்டனின் நாடாளுமன்ற அரசாங்க முறையை ஏற்றுக் கொண்டது. ஒருவருக்கு ஒரு வாக்கு உரிமை தரப்பட்டது. வயது வந்த இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சம வாக்குரிமை அளிக்கப்பட்டது. முன்னேறிய மேலை நாடுகளில்கூட அனைவருக்கும் வாக்குரிமை என்பது அளிக்கப்படவில்லை. படிப்படியாகத் தான் அளிக்கப்பட்டது. இங்குதான் 21 வயது நிரம்பியவருக்கு வாக்குரிமை தரப்பட்டது. அதுவும் 18 வயதாக 1988 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது.**

மக்களால்தேர்ந்தெடுக்கப்படும்மக்களாட்சிதான், இந்தியஅரசமைப்பின் குணம் ஆகும். இத்தகைய மக்களாட்சியை உருவாக்க வேண்டிய கடமையை தேர்தல் ஆணையத்துக்கு அரசமைப்புச் சட்டம் வழங்குகிறது. தனித்த அதிகாரங்கள் பொருந்திய அமைப்பு இது. ஆனால் இன்றைய தினம் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சந்தேகத்துக்குரியதாக மாறி இருக்கின்றன. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வின் தொங்கு சதையாக மாறி, சர்ச்சையில் சிக்கி இருக்கிறது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையர்கள் தேர்வில் பல்வேறு திருகு வேலைகளை பா.ஜ.க. அரசு செய்தது. தேர்தலில் பல்வேறு திருகு வேலைகளை தேர்தல் ஆணையர்கள் செய்கிறார்கள். பா.ஜ.க.வைக் காப்பாற்றுவதற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் இந்தியாவில் முதன்முதலில் 1998 ஆம் ஆண்டு கேரளாவின் வடக்கு பரவூர் சட்டசபை இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. 2004 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இந்தியா முழுவதும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நவீன முறையையும் தனது சதிக்கருவிகளாகப் பா.ஜ.க. பயன்படுத்தப் பார்க்கிறது. இத்தனை ஆண்டுகள் கழித்தும் முழுமையான, சுத்தமான ஒரு வாக்காளர் பட்டியலைக் கூட தயாரிக்க முடியாத நிலைமையில்தான் தேர்தல் ஆணையம் இருக்கிறது.**

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் ஆணையத்தின் அனைத்துச் சீரழிவுகளையும் கிழித்துத் தொங்கவிட்டுள்ளார். அவரது குற்றச்சாட்டில் ஒன்று கூட தேர்தல் ஆணையத்தால் மறுக்கப்படவில்லை. மக்களாட்சி மாண்புக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் நெருக்கடி இது.

பீகாரில் ஒரே நேரத்தில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். இறந்துவிட்டதாகச் சொல்லி நீக்கப்பட்ட வாக்காளர்களைக் கூட்டி வைத்து டீ சாப்பிட்டுள்ளார் ராகுல் காந்தி. இதை விடக் கேவலம் இருக்க முடியுமா? இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கிய உரிமையைக் கிழித்தெறிந்திருக்கிறது தேர்தல் ஆணையம்.

**இந்தியா தனது 79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்நாளில் மக்களாட்சித் தத்துவம், பா.ஜ.க.வால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. மக்களாட்சியைக் காக்க தொடர்ந்து போராடுவோம்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” மற்றும் “நலம் காக்கும் ஸ்டாலின்” ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிட மாடல்’ அரசு மீது வெறுப்பைக் கக்கும்

# நாக்பூரின் ஏஜெண்டாக செயல்படுகிறார் ஆளுநர் ரவி!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு காட்டமான பதிலடி!

**சென்னை, ஆக. 15 - ‘திராவிட மாடல்’ அரசு மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்கும் நாக்பூரின் ஏஜெண்டாக செயல்படுகிறார் ஆளுநர் ரவி” என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான அமைச்சர் கே.என்.நேரு அறிக்கையில் கூறியுள்ளார்.**



இது குறித்து அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

“தமிழ்நாட்டில் இளைஞர்கள் மத்தியில் ரசாயனப் போதைப்பொருள்களின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. பெண்கள், பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பது கவலை அளிக்கிறது” எனக் கிண்டி கமலாலயத்தில் (!) இருந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தென்னை மரத்தில் தேள் கொட்டியதற்குப் பனை மரத்தில் நெறிக் கட்டும் என்ற பழமொழியைப் போல ‘தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் ஆளுநர் எதுவும் செய்யவில்லை’ எனச் சொல்லி நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் கையால் பட்டம் பெற மறுத்து அவமானத்தைச் சந்தித்த ஆளுநர் ரவிக்கு 24 மணி நேரம் கழித்து நெறி கட்டியிருப்பதைத் தான் அவருடைய அறிக்கை வெளிக்காட்டுகிறது.

### விரக்தியில் வெம்பி ஆளுநர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்!

இன்னொரு பக்கம் சுதந்திர தினத்திற்காகத் தேநீர் விருந்துக்கு அரசியல் கட்சிகளுக்கு ஆளுநர் ரவி அழைப்பு விடுத்ததை தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் புறக்கணித்திருக்கின்றன. இப்படி விரக்தியில் வெம்பி அறிக்கை விட்டிருக்கிறார் ஆளுநர். அதில் சொல்லப்பட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கெனவே ஆதாரத்தோடு பதில் அளிக்கப்பட்டுவிட்டது.

நாட்டின் சுதந்திர தினத்திற்கு விடுத்துள்ள செய்தியில் கூட நாகரிகம் இல்லாமல் ஆதாரமில்லாமல், மனம் போன போக்கில் அவதூறுகளை அள்ளி வீசியிருக்கிறார். ஒன்றியத்தை ஆளும் பாசிச பாஜக, தங்களுக்கு வேண்டாத மாநிலங்களுக்கு ஆளுநர் என்னும் நச்சுப் பாம்பை அனுப்பி குடைச்சல் கொடுத்து வருகிறது. அப்படித் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்த ஆர்.எஸ்.எஸ்சின் கைக்கூலி ஆர்.என்.ரவி ஜனநாயக முறையில் மக்களின் பெருவாரியான ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார். அத்தனை நெருக்கடிகளையும் உச்ச நீதிமன்றம் வரை சென்று நாம் நசுக்கினோம்.

### அசிங்கமான அரசியல் செய்கிறார் ஆளுநர்!

அமைச்சர்கள் நியமனம், மசோதாக்கள் நிறுத்தி வைப்பு, ஆளுநர் உரையில் ஆரியத் திணிப்பு என எதிலாவது ஆளுநர் ரவி வெற்றி பெற்றிருக்கிறாரா? அவமானங்களை மட்டுமல்ல, தொடர் தோல்விகளையும் தாங்கிக் கொள்வது அரிய கலை.

இந்திய அளவில் பாசிசச் சக்திகளிடம் கட்டுண்டு கிடந்த ஜனநாயகத்தை மீட்டெடுத்தோம். பல் பிடுங்கப்பட்ட பாம்பாக மாறி ஆள் இருக்கும் இடமே தெரியாத அளவுக்கு மாறிவிட்ட ஆளுநர், சுதந்திர தின உரை என்ற பெயரில் அவதூறுகளை வீசி தன்னையே அழுக்காக்கிக் கொண்டார். ஆளுநரின் அறிக்கையில் ’பாஜகவுக்கு வாக்களியுங்கள்’ என்ற ஒற்றை வார்த்தை மட்டும்தான் இல்லை. மற்றபடி ஆதாரங்கள் இல்லாமல் அவதூறுகளை வீசும் அசிங்கமான அரசியல்தான் செய்திருக்கிறார்.

### அமித்ஷாவே சிரிப்பார்!

ஒன்றிய அரசு லட்சக்கணக்கான கோடிகளை தமிழ்நாட்டுக்கு நிதிப் பகிர்வு வழங்கியது எனச் சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு மோடி அரசு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் ’தமிழ்நாடு’ என்ற பெயரே இல்லை என்பது கூட தெரியாமலா ஓர் ஆளுநர் இருப்பார்? இந்த போட்டோஷாப் வேலைகள் எல்லாம் தமிழ்நாட்டில் எடுபடாது என்று தெரிந்தும் அறிக்கை வெளியிட்டுத் திருப்திப்பட்டுக் கொள்வது எல்லாம் ஆகச் சிறந்த நகைச்சுவை. ஆளுநரின் அறிக்கையைப் படித்தால் அமித் ஷாவே சிரிப்பார்

தமிழ்நாடு பற்றிய தேசியப் புள்ளி விவரங்கள் கல்வியிலும், சமூகபாலின வேறுபாடுகளைக் களையும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், ஆற்றல் மிக்க இளையோரை உருவாக்குவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. அண்மையில் ஒன்றிய அரசு புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்ட விவரங்களின்படியே பத்தாண்டுக்குப் பிறகு, தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி விகிதம் 11.19 சதவிகிதமாக இரட்டை இலக்க வளர்ச்சிய எட்டியுள்ளது.

இந்நிலையில்தான் ஆளுநர் பொய்களையும் அவதூறுகளையும் வரி இறைத்திருக்கிறார். ஆளுநரின் பேச்சுக்குப் பதில் கூறும் முகமாக ஆதாரங்களை முன்வைத்துப் பதிலளிப்பது, பயனற்றது. ஏனென்றால், ஆளுநர் ஆர்.என். ரவி தமிழ்நாட்டின் ஆளுநராகச் செயல்படாமல், திராவிட மாடல் மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்கும் நாக்பூரின் ஏஜெண்டாகச் செயல்பட்டு வருகின்றார்.

**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்.**

என்கிற வள்ளுவரின் குறளுக்கு உதாரணமாக விளங்குகின்றார். “பலர் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவன், எல்லாராலும் இகழப்படுவான்” என்பதுதான் அந்த குறளின் பொருள்.

இதனைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிந்தே உள்ளனர். அதனால் தமிழ்நாட்டு மக்கள் எவரும் ஆளுநருக்குரிய மதிப்பை அவருக்கு அளிப்பதில்லை.

### கமலாலயத்திற்குப் போட்டியாக ராஜ்பவனை மாற்ற முயற்சிக்கிறார்!

நாட்டிலேயே தனிநபர் வருமானத்தில் முதலிடத்தில் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக இருப்பதும் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே அதிகப் பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கியதும் அதிக ஸ்டார்ட் அப் எண்ணிக்கைகளும் உருவாக்கியது தமிழ்நாடுதான்.

கடந்தாண்டு புயல் வெள்ளப் பாதிப்புகளுக்காக தமிழ்நாடு அரசு 37,907 கோடி ரூபாய் கேட்டபோது வெறும் 276 கோடி ரூபாயை மட்டுமே வழங்கி வஞ்சித்தது ஒன்றிய அரசு.

பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியையும் இன்னும் வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் நிதி என்று ஒன்றிய கல்வி அமைச்சர் அறிவித்தது ஜனநாயகப் படுகொலை இல்லையா? குலக்கல்வியை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா திட்டத்தைச் செயல்படுத்தத் துடிக்கும் ஒன்றிய அரசின் கையாலாகாத கையாள் ரவிக்கு தமிழ்நாட்டுக் கல்வியின் தரம் பற்றி என்ன தெரியும்? தமிழ்நாட்டு அடையாளத்தை அழிக்கும் வகையில் கீழடி அகழ்வாராய்வு அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது ஒன்றிய அரசு.

ராஜ்பவனை ஆளுநர் ரவி அரசியல் பவனாக மாற்றி, கரை வேட்டிக் கட்டிய அரசியல்வாதி போலச் செயல்படுகிறார். கமலாலயத்திற்குப் போட்டியாக ராஜ்பவனை மாற்ற முயல்கிறார். ஆளுநர் அந்தந்த மாநில அரசுகளுக்கு நண்பராக இருக்க வேண்டியவர். ஆனால், எதிரிக் கட்சியாக நின்று, வசைமாரி பொழிந்து கொண்டிருக்கிறார்.

ரம்மி நிறுவனங்களுக்கு பிராண்ட் அம்பாசிடராகவும் ‘நீட்’ பயிற்சி மையங்களுக்கும் பி.ஆர்.ஓ.வாகவும் செயல்படுகிறவரிடம் என்ன நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? உச்ச நீதிமன்றம் வரையில் போய் கரியைப் பூசிக் கொண்ட பிறகும் ஒருவர் திருந்தவில்லை.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று (14.08.2025) பள்ளிக் கல்வித் துறை சார்ந்த சட்டப் பேரவை அறிவிப்புகள், திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் எதிர்கால இலக்குகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பள்ளிக் கல்வித் துறையின் இயக்ககம் வாரியாக விரிவான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் மரு.சந்தர மோகன் B, மாநிலத் திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி பள்ளிக் கல்வித் துறை சிறப்பு செயலாளர் திருமதி எஸ்.ஜெயந்தி பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், உறுப்பினர் செயலாளர் (மாதிரிப்பள்ளிகள்) இரா.சுதன்(வி.ஒய்வு), தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் பெ.குப்புசாமி, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் முனைவர். சி.உஷாராணி, இயக்குநர் அரசு தேர்வுகள் இயக்ககம் திருமதி ந.லதா மற்றும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர்கள் பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.